# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

**24.12.07ல் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப் பட்டுள்ள பொருள்.**

1.இந்நகராட்சி வணிக வளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடையை தற்போது கடை நடத்தி வரும் அனுபோகம் இல்லாத உரிமம்தாரர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல்துறை அரசாணை எண் 92 நாள் 3–7–2007ன்படி பெயர்மாற்றக் கட்டணமாக 12 மாத வாடகை தொகை மற்றும் வைப்புத்தொகை செலுத்தி உரிமம் பெயர்மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்துள்ள கீழ்க்கண்ட நபர்களின் மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ எண் | கடை எண் | கடை பழைய உரிமம்தாரர் பெயர் முகவரி | தற்போதைய உரிமம்தாரர் பெயர் முகவரி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| பழைய பேரூந்து நிலைய வணிக வளாகம் | | | |
| 1 | 89 | மாணிக்கராஜ் | கே. திலகராஜ்<br>38, மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 2 | 92 | தாழம்பூ அம்மாள் | கே. கதிரேசன்<br>38, மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 3 | 97 | என். நடராஜன் | எம். ஜெயராணி,<br>73ஜி/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 4 | 98 | சுந்தரியம்மாள் | எம். ஸ்ரீதர்<br>73ஜி/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 5 | 99 | அண்ணாமலை | எம்.செந்தில் குமார்<br>73ஜி/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 6 | 114 | சீனியம்மாள் | எம். ஜெயராணி<br>73ஜி/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |
| 7 | 115 | மாரியப்பன் | எஸ். பாலமுருகன்,<br>12ஏ அண்ணாநகர் 6ம் தெரு, தூத்துக்குடி |
| 8 | 116 | பால்சாமி | எஸ். பாலமுருகன்,<br>12ஏ அண்ணாநகர் 6ம் தெரு, தூத்துக்குடி |
| 9 | 117 | துரைச்சாமி | ஏ. சண்முகம்<br>97டுவிபுரம் 3ம் தெரு, தூத்துக்குடி |
| 10 | Hotel | சஙகரநாராயணன் | மாரியப்பன்<br>73ஜி/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி |

| | | | |
|---|---|---|---|
| 11 | 118/2 | முத்துசாமி (பெட்டிக்கடை (15' x 7') | கென்னடி J.V<br>14/1364 பாரதியார் நகர் மெயின் ரோடு, மில்லர்புரம், தூத்துக்குடி |
| 12 | STD பூத் | கணேசன் | J.V கென்னடி<br>14/1364 பாரதியார் நகர் மெயின் ரோடு, மில்லர்புரம், தூத்துக்குடி |
| வி.இ. ரோடு | | | |
| 13 | 493 | பேச்சியம்மாள் | ஜே. சிவசூரியன்<br>129 ஜெயிலானித்தெரு தொடர்ச்சி, தூத்துக்குடி |
| சத்திரம் தெரு | | | |
| 14 | 5 | தி. டைட்டஸ் | டி. பொன்னுதுரை<br>த/பெ தா. தங்கராஜ்<br>93ஐ/50 அசோக்நகர் 4ம் தெரு, தூத்துக்குடி |

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை அரசாணை எண் 92 நாள் 3–7–07ன்படி 12 மாத வாடகை பெயர்மாற்ற கட்டணமும் மற்றும் வைப்புத் தொகையாக 12 மாத வாடகையும் செலுத்தியுள்ளதால் கலம் எண் 2ல் கண்டுள்ள கடைகளுக்கு கலம் எண் 3ல் கண்டுள்ள பெயரில் இருந்து கலம் எண் 3ல் கண்டுள்ள பெயரில் இருந்து கலம் எண் 4ல் கண்டுள்ள பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி கலம் எண் 2ல் கண்டுள்ள வாடகை நிலுவைக்கு கலம் எண் 3ல் கண்டுள்ள உரிமம்தாரர் செலுத்திய காலம்கடந்த வைப்புத்தொகையில் உள்ள முன்பணத்தில் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3) வரிசை எண் 14ல் கண்டுள்ள கடையின் தற்போதைய உரிமம்தாரர் முன்பணம் மற்றும் கடை வாடகை நிலுவை இல்லாமல் செலுத்தியுள்ளதால் முந்தைய உரிமதாரர் பெயரில் உள்ள முன்பணம் அவர் பெயரிலேயே திரும்ப வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 24404/07

<u>**தீர்மானம் எண்: 1**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

**24. 12.07ல் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப் பட்டுள்ள பொருள்**

2. பொன்விழா ஆண்டு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதியில் செயல்பட்டு வரும் 20வது வார்டு பீச் ரோடு சகாயபுரம் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை 5 சிக்கண நாணய சஙகஙகள் தஙகளின் உபயோகத்திற்கு வாடகை அடிப்படையில் வழஙக கேட்டுள்ளார்கள். மேற்படி இடம் சத்துணவு கூடமாக செயல்பட்டு இடிந்த நிலையில் உள்ளதாலும், இடிந்த நிலையில் உள்ள மேற்படி சத்துணவு கூட கட்டிடத்தை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் புதிதாக கடைகள் கட்டி குத்தகை

அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்வதற்கு மன்றத் தீர்மானம் எண் 287 நாள் 27–4–2007ல் அனுமதி அளித்துள்ளது.

எனவே மேற்படி இடத்திற்கு தரை வாடகை நிர்ணயம் செய்து சிக்கண நாணய சஙகஙகளுக்கிடையேயான பொது ஏலத்தில் விடுவது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் முடிவெடுக்கலாம்.

எப்6. 23140/07

**<u>தீர்மானம் எண்: 2</u>**

தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

3. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள பாளையஙகோட்டை ரோட்டில் காய்கறி மார்கெட் அருகில் புதியதாக தார்சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 1,85,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 208/2007–08

**<u>தீர்மானம் எண்: 3</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

4. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள புதிய பேரூந்து நிலையம் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆடு வதை சாலையில் பூஙகா அமைக்கவும் மற்றும் அணுகுசாலை அமைக்கவும், அலுவலக அறையில் டேபிள், சேர் வசதி செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 1,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 207/2007–08

**<u>தீர்மானம் எண்: 4</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

5. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள பிரையண்ட்நகர் 13ம் தெருவில் வடக்கு தெற்கு சந்து சாலையில் புதியதாக சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 65,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 209/2007–08

**<u>தீர்மானம் எண்: 5</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

6. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள வி,இ, ரோட்டில் கிழக்கு பக்கம் ஜிம்கானா கிளப் அருகில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 80,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு     மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 211/2007—08

**<u>தீர்மானம் எண்: 6</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

7. இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள ராஜாஜி பூஙகா நீர்த்தேக்கத்தில் கலைஞர் பூஙகா நீர்த்தேக்கத்திற்கு புதியதாக மோட்டார் பம்ப் ரூம் கட்டுவதற்கு ரூ 3,15,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலை உத்திரவு வழஙகப்பட்டு தற்போது வேலை முடிவுற்றுள்ளது. மேற்கண்ட வேலையில் தற்போது மதிப்பீட்டை விட கூடுதலாக வரும் செலவினம் ரூ 47,908/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு     மன்றம் அனுமதி வழஙகலாம். கூடுதல் செலவினம் நகராட்சி பொது
நிதியிலிருந்து வழஙகலாம்.

மபஎண் 210/2007—08

**<u>தீர்மானம் எண்: 7</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

8. இந்நகரராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்தில் நீர் உறிஞ்சும் கிணறு எண் II ல் புதிய 40 கு.வேக மின் மோட்டார் மற்றும் மின் துவக்கி இரு எண்ணஙகள் விநியோகம் செய்து பொருத்தி இயக்கித் தரும் பணிக்கு 20—12—2007ஆம் தேதியன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விபரம் |
|---|---|---|
| 1 | M/s. Rowkal and company, Madurai | 0.61% குறைவு டேவணித் தொகை செலுத்தியுள்ளார்கள் |
| 2 | M/s. Ananda Enterprises, Madurai | 0.58% கூடுதல் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்கள் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/s. Rowkal and company, Madurai எனும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அஙகீகரிக்கலாம்.
2. மன்றம் தனது நிர்வாக எண் 711 நாள் 26—11—2007 ஆம் தேதியில் மன்றம் அனுமதி
   அளிக்கப்பட்டுள்ளது.

இ3. 23604/07

**<u>தீர்மானம் எண்: 8</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

9 இந்நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட கருவூலம் இயங்கி வரும் கட்டிடத்தில் புதியதாக வயரிங செய்வதற்கு 26–11–2007 தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலை விபரம் | ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின், திருநெல்வேலி | ஜெயகிஷோர் ஏஜென்சீஸ், திருநெல்வேலி |
|---|---|---|---|
| 1 | எம்சிபி டிபி போர்ட் வித் 40 ஆம்ஸ் பி/எஸ் சுவிட்ச் இண்டிகேட்டர் எம்சிபி ஆர்சிசிபி எக்ஸ்ட்ரா<br>MCB, DB Board with 40A P/S switch indicator MCB, RCCB etc., | 7650/– Set ஒன்றிற்கு | 7790/– Set ஒன்றிற்கு |
| 2 | 63 ஆம்ஸ் 4பி எப் ஹெச் மெயின் சுவிட்ச்<br>63A , 4P, FH Main switch | 4300/–<br>ஒன்றிற்கு | 4450/–<br>ஒன்றிற்கு |
| 3 | 7/20 பிவிசி பிளக்சிபிள் வயர்<br>7/20 PVC Flexible wire | 4820/–காயில்<br>ஒன்றிற்கு | 4890/–காயில்<br>ஒன்றிற்கு |
| 4 | 3/20 பிவிசி பிளக்சிபிள் வயர்<br>3/20 PVC Flexible wire | 1615/–காயில்<br>ஒன்றிற்கு | 1710/–காயில்<br>ஒன்றிற்கு |
| 5 | 1/18 பிவிசி பிளக்சிபிள் வயர்<br>1/18 PVC Flexible wire | 825/– காயில்<br>ஒன்றிற்கு | 910/– காயில்<br>ஒன்றிற்கு |
| 6 | சிஎல் பாக்ஸ் டைப் எலக்ட்ரானிக் பிட்டிங<br>CL Box Type Electronic fitting | 330/– each<br>ஒன்றிற்கு | 360/– Per piece<br>ஒன்றிற்கு |
| 7 | 5 இன் ஒன் சுவிட்ச் /சாக்கெட் கம்பைண்ட்<br>5 in one switch/ Socket Combined | 115./– each<br>ஒன்றிற்கு | 120/– each<br>ஒன்றிற்கு |
| 8 | 6 ஆம்ஸ் சுவிட்ச்<br>6Amps switch | 12/– each<br>ஒன்றிற்கு | 12/– each<br>ஒன்றிற்கு |
| 9 | 6 ஆம்ஸ் சாக்கெட்<br>6 Amps Socket | 20/– each<br>ஒன்றிற்கு | 17/- each<br>ஒன்றிற்கு |

**அலுவலகக் குறிப்பு**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 1 லிருந்து 7 வரை குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் திருநெல்வேலி விலைப்புள்ளியையும் அயிட்டம் 8 மற்றும் 9க்கு குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஜெயகிஷோர் ஏஜென்சீஸ், திருநெல்வேலி விலைப்புள்ளியையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ3. 20599/07

**தீர்மானம் எண்: 9**

அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது

10 இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள மின் மோட்டார் மற்றும் மின் துவக்கிகளுக்கான ஸ்பேர் மோட்டார் ஸ்டாட்டர் (Spare Motor starter) வாஙகுவதற்கு 20–12–2007ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலை விபரம் | ரவ்கால் அண்ட்கோ Rowcal and Company, Madurai | ஆனந்தா எண்டர்பிரைசர்ஸ் Ananda Enterprises, Madurai |
|---|---|---|---|
| 1 | 40 கு. வேக திறன், 3 பேஸ் ஏசி 40 HP 3 ßase AC 4 போல் 4 Pole 1500 rpm ஸ்குருள்கேஜ் Squirrel cage Induction motor இன்டக்சன் மோட்டார் | 68400/– each | 69400/– each |
| 2 | ஆட்டோமேட்டிக் ஏர் பிரேக் Automatic Air Break ஆட்டோ டிரான்ஸ்பார்மர் ஸ்டாட்டர் Auto Transformer starter | 60300/– each | 61200/– each |
| 3 | டிஸ்மாண்ட்லிங சார்சஜ் பார் ஸ்டாட்டர் Dismandling charges for starter | 1170/- each | 1260/– each |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள Rowcal and Co.,. Madurai விலை விகிதம் Water Board Schedule of rate 2007–08 யை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் மார்க்கெட் நிலவரத்தையும் ஒத்துள்ளதால் மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ3. 020575/07

**<u>தீர்மானம் எண்: 10</u>**

அலுவலகக் குறிப்புபடி அஙகீகரிக்கப்பட்டது

11 இந்நகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் இந்நகராட்சிப் பகுதியில் மலேரியா கொசு ஒழிப்பு மருந்துகள் தெளிக்க 15 கை தெளிப்பான்களும் 5 புகை மருந்து தெளிப்பான்களும் வாஙக ரூ 4. 00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், நகர்மன்ற தீர்மானம் எண் 546 நாள் 26–09–2007ல் அனுமதி வழஙகியுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளியாக கை தெளிப்பானுக்கு ரூ 6950/–ம் புகை மருந்து தெளிப்பானுக்கு ரூ 59,550/–ம் நகர்மன்ற தீர்மானம் எண் 710 நாள் 26–11–2007ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை பத்திரிக்கை விளம்பரம் உட்பட ரூ 4,10,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஆகும். எனவே கூடுதல் செலவினம் ரூ 10,000/– (பத்தாயிரம் மட்டும்)க்கு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு 1. அனுமதிக்கலாம்.

எச்1. 16212/2007

**தீர்மானம் எண்: 11**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

12 இந்நகராட்சிக்கு சொந்தமான பாளையஙகோட்டை ரோடு கழிவு நீர் நீரேற்று நிலையத்தில் 20 கு,வேக திறன் Non clog pumpset நிறுவும் பணிக்கு 19.12.2007ம் தேதிய அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலை விபரம் | ஸ்ரீராம் என்ஜினியரிங அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ் தூத்துக்குடி | லெட்சுமி மெஷின் டூல்ஸ் தூத்துக்குடி. |
|---|---|---|---|
| 1 | பாளையஙகோட்டை ரோடு கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் புதியதாக 20 குதிரை வேக திறன் எஸ்.பி. நான் கிளாக் பம்ப் செட் எரக்சன் ஒர்க் 20 HP SP NON CLOG PUMPSET ERRECTION WORK | மதிப்பீட்டை விட 0.4% குறைவு | மதிப்பீட்டை விட 12.84% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்ரீராம் என்ஜினியரிங அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி விலை விகிதம் மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் மார்க்கெட் நிலவரத்தையும் ஒத்துள்ளதால் மன்றம் அஙகீகரிக்கலாம்.

2) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 616 தேதி 31/10/07 ரூ 3.5 இலட்சத்திற்கு அனுமதி வழஙகியுள்ளது.

இ3/20577/07

**தீர்மானம் எண்: 12**

அலுவலகக் குறிப்பு 1, 2 அஙகீகரிக்கப்பட்டது

13. திரு G.S. இஸ்ரவேல், வரித்தண்டலர் பணியில் சேரும் போது வைப்புத்தொகையாக ரூ 500/— நகராட்சியில் செலுத்தியுள்ளார். தற்போது மேற்படியார் 31—5—2002ல் ஓய்வு பெற்று விட்டதால் தான் செலுத்திய வைப்புத்தொகையை திரும்ப வழஙக கேட்டுள்ளார். அன்னாரின் வைப்புத்தொகை காலஙகடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகை ரூபாய் 500/—ஐ வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு — மன்றம் அனுமதிக்கலாம்.

ந,க,எண். பி4/9801/07

**தீர்மானம் எண்: 13**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 13க்கு 20–12–07ம் தேதி நடைபெற்ற ஏல/ ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. ஏ. விக்டோரியா, 48 போல்பேட்டை, தூத்துக்குடி. | ரூ. 1300/–(மாத வாடகை) |
| 2 | திரு K, கண்ணன், 52 கிப்சன்புரம், தூத்துக்குடி. | ரூ. 900/– (மாத வாடகை |
| 3 | திரு. எல். கணேசன், 65A/1 மேலூர் பங்களா தெரு, தூத்துக்குடி. | ரூ. 800/– (மாத வாடகை) |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. ஏ. விக்டோரியா என்பவரின் மாத வாடகை ரூ 1300/–க்கு உரிமம் வழஙகுவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

புதிய பேருந்து நிலைய கடை எண் 15க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி A. விக்டோரியா என்பவரின் மாத வாடகை ரூ 1300/– அருகில் உள்ள கடை எண் 14–இன் மாத வாடகை ரூ 900/– விட கூடுதலாகவும் கடை எண் 16–இன் மாத வாடகை ரூ 834/– விட கூடுதலாக உள்ளதாலும் இனி வரும் காலஙகளில் நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு புதிய பேருந்து நிலைய கடை எண் 15க்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருமதி A. விக்டோரியா என்பவரின் மாத வாடகை ரூ 1300/–க்கு உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/187/08

<u>தீர்மானம் எண்: 14</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான மின்சாதன பொருட்கள் வாஙகிட அரசு விதிமுறைகளின்படி செய்தித்தாளில் விளம்பரம் செய்த வகைக்கான செலவினம் ரூ 17,509 க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக் குறிப்பு</u> – மன்றம் அனுமதி அளிக்கலாம்

ந.க.எண்.இ3/13385/06

<u>தீர்மானம் எண்: 15</u>

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

16. இந்நகராட்சி வார்டு எண் 50 கதவு எண் 5 E/9 பாளையஙகோட்டை மேற்கில் உள்ள கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண். 500686ஐ தவறாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் நகராட்சி பகுதியை சேர்ந்தது அல்ல. மீளவிட்டான் ஊராட்சிப் பகுதியை சேர்ந்ததாகும். தவறுதலாக நகராட்சி பகுதியில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு எண். 500686ஐ மாதாந்திர ஜாபிதா பில் சேர்த்து 1/4/2007 முதல் ரத்து செய்யப்பட்டது. 1993–94 (II) ம் அரையாண்டு முதல்

2006–07 (II) அரையாண்டு வரை நிலுவையாக உள்ள சொத்துவரித் தொகை ரூ 27675/-ஐ வஜா செய்யவும் மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக் குறிப்பு</u> –** அனுமதிக்கலாம்

அ8/24427/07

**<u>தீர்மானம் எண்: 16</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. இந்நகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்தில் புதிய திட்டத்தில் 170 கு,வே. மின்மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள 150 KVAR கபாசிட்டரில் 50 KVAR கபாசிட்டர் மட்டும் பழுதாகி பவர் பேக்டர் குறைந்ததால் மின் வாரியத்திற்கு அபராத தொகை கட்ட நேரிடுவதை தவிர்க்கும் பொருட்டு, குடிநீர்ப்பணியின் அவசர அசியம் கருதி புதிதாக 50 KVAR கபாசிட்டர் எனும் மின் சாதனம் நகராட்சி விதி எண் 15 ன் கீழ் வாங்கி பொருத்தி ரூ 20,000/– செலவில் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – பதிவு செய்யலாம்

ந.க.எண்.21444/இ3/07

**<u>தீர்மானம் எண்: 17</u>**

அலுவலகக் குறிப்புபடி பதிவு செய்யப்பட்டது

18.. தூத்துக்குடி நகராட்சியில் நகர்புற சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் உட்கட்டமைப்பு வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 3 சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்கள் மூலம் விளம்பரம் செய்ததற்கும் அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ 4179/– Chennai Enthiram Communication (P) Ltd., அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.
அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்

இ1/21354/08

**<u>தீர்மானம் எண்: 18</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இந்நகராட்சிக்கு சொந்தமான TN69- H 5735 குடிநீர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கப் பணிகள் செய்து மீண்டும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற வேண்டும். 31–12–2007 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி .. ரூ 27,800/–
2. மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் சிதம்பரநகர், தூத்துக்குடி ...ரூ 25,100/–
3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ், தூத்துக்குடி .. ரூ 28,500/–

## அலுவலகக் குறிப்பு

1. இதற்கான செலவீனத்திற்கு மன்றம்தனது தீர்மான எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது.
2. வரப்பெற்ற மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 25150/07

**தீர்மானம் எண்: 19**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஏற்றுக் கொள்ளப்பட்டது

20. இந்நகராட்சிக்கு சொந்தமான TN69- H 5720 கழிவுநீர் லாரியின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கப் பணிகள் செய்து மீண்டும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெற வேண்டும். 24–12–2007 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம்பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஆர்என்ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர், தூத்துக்குடி .. ரூ 32,250/–
2. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை ,தூத்துக்குடி .. ரூ 31,050/–
3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் , கால்டுவெல் காலனி, தூத்துக்குடி .. ரூ 36,300/–

## அலுவலகக் குறிப்பு

1. இதற்கான செலவீனத்திற்கு மன்றம்தனது தீர்மான எண் 387 நாள் 31–7–2007ல் அனுமதி அளித்துள்ளது.

2. வரப்பெற்ற மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 24471/07

**தீர்மானம் எண்: 20**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஏற்றுக் கொள்ளப்பட்டது

21. மீளவிட்டான் சாலையில் தார்தளம் அமைக்கும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 18–12–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டுற்கு | டேவணித் |
| தொகை | | |
| | ரூ. 0. 15 குறைவு | செலுத்தியுள்ளார் |

2) திரு எஸ். ரம்போலா மதிப்பீட்டுற்கு டேவணித் தொகை

ரூ 3. 17% அதிகம் செலுத்தியுள்ளார்

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 639 தேதி 31–10–07ல் ரூ. 3, 85,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 15% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 150/07–08

**<u>தீர்மானம் எண்: 21</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

22. இந்நகராட்சி ராஜாஜி பூங்காவிலுள்ள நீர்த்தேக்க நிலையத்திலுள்ள 40HP Unit I ல் பம்ப் செட்டில் உள்ள டெலிவரி லைனில் உள்ள சுலுய்ஸ் வால்வு ராடு மற்றும் செக் நட்டுகள் பழுதாகி உள்ளது. சரி செய்ய புதியதாக மாற்றி இயங்க வைக்க வேண்டி உள்ளது. எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் நகராட்சி சட்ட விதி எண் 15–ன் கீழ் செய்து முடித்ததற்கும் அதற்கான செலவினம் ரூ 12,500/– மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக் குறிப்பு</u> பதிவு செய்யலாம்.

மபஎண் 212/2007–08

**<u>தீர்மானம் எண்: 22</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

23. இந்நகராட்சி ராஜாஜி பூங்காவிலுள்ள நீர்த்தேக்க நிலையத்திலுள்ள 40HP Unit 2 ல் பம்ப் செட்டில் உள்ள டெலிவரி லைனில் உள்ள சுலுய்ஸ் வால்வு ராடு மற்றும் செக் நட்டு பழுதாகி உள்ளது. சரி செய்ய புதியதாக மாற்றி இயங்க வைக்க வேண்டி உள்ளது. எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை நகராட்சி சட்ட விதி எண் 15–ன் கீழ் செய்து முடித்ததற்கும் அதற்கான செலவினம் ரூ 12,500/– மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக் குறிப்பு</u> பதிவு செய்யலாம்.

மபஎண் 213/2007–08

**<u>தீர்மானம் எண்: 23</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

24. இந்நகராட்சி வருவாய் பிரிவுக்குத் தேவையான கீழ்க்கண்ட படிவங்களை கூட்டுறவு சேவை சங்கத்தில் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ 30000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. சொத்துவரி ஜப்தி நோட்டீஸ் – 20000 எண்ணம்

2. குடிநீர் கட்டண இறுதி அறிவிப்பு நோட்டீஸ் – 10000 எண்ணம்

அலுவலக குறிப்பு – அவசர அவசியம் கருதி நகர்மன்றஅனுமதியை எதிர்நோக்கி நோட்டீஸ் அச்சிட்டு வாஙகியதையும் அதற்கான செலவினத்தையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். அ1/22294/07

**தீர்மானம் எண்: 24**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

25. இந்நகராட்சிக்கு சொந்தமான டி.என். 69எச், 4446 அம்பாசிடர் கார்வாகனத்தில் டயனமோ மற்றும் இதனுடன் இணைந்த பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு 05/11/07ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளியாக ரூ 4990க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் R.N.R. மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனம் தூத்துக்குடி மூலம் நகர்மன்ற தலைவர் வாகன இயக்கம் அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு – பதிவு செய்யலாம்.

ந.க.எண். இ1/22322/07

**தீர்மானம் எண்: 25**

அலுவலகக் குறிப்புபடி பதிவு செய்யப்பட்டது

26. டெலிபோன் காலனி பகுதியில் தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி செய்ய பொருட்கள் விநியோகம் செய்ய SJSRY திட்டத்தின் கீழ் செய்ய 19–12–2007 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. திரு. ஜி. பார்த்தீபன் | ரூ. 1.98 % | மதிப்பீட்டிற்கு குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | ரூ. 2.01 % | மதிப்பீட்டிற்கு அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு

1) மேற்படி பகுதியில் மன்றம் தனது தீர்மானம் எண் 506 தேதி 21–9–2007ல் ரூ 400000/–க்கு அனமதி வழக்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளினன் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 1.98 % குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 27/2007–08

**தீர்மானம் எண்: 26**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

27. இந்நகர் அழகேசபுரம் 1வது மற்றும் 2வது தெருவில்மழைநீர் வடிகால் கட்டும் பணி 12வது நிதி குழு திட்டத்தில் செய்ய 9–1–2008 அன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. திரு. எஸ். ரம்போலா | ரூ. 7.06 % | மதிப்பீட்டிற்கு அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். சுதர்சன் | ரூ. 4.38 % | மதிப்பீட்டிற்கு குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு

2) மேற்படி பகுதியில் மன்றம் தனது தீர்மானம் எண் 608 தேதி 31–10–2007ல் ரூ 320000/–க்கு அனுமதி வழக்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.38 %அதிகமாமான திரு எஸ்.சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியாக மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 184/2007–08

**<u>தீர்மானம் எண்: 27</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

28. இந்நகராட்சி பகுதி தட்டார் தெரு மற்றும் அண்ணா காலனி பகுதியில் 12வது மாநில நிதி குழு திட்டத்தின் கீழ் மழைநீர் வாறுகால் அமைக்கும் பணிக்கு 9–1–08 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. திரு. எஸ். ரம்போலா | ரூ. 7.07 % | மதிப்பீட்டிற்கு அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு . எஸ். சுதர்சன் | ரூ. 4.91 % | மதிப்பீட்டிற்கு அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு

1) மேற்படி பகுதியில் மன்றம் தனது தீர்மானம் எண் 608 தேதி 31–10–2007ல் ரூ 400000/–க்கு அனுமதி வழக்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளினன் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.91 % அதிகமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியாக மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 188/2007–08

**<u>தீர்மானம் எண்: 28</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

29. இந்நகராட்சி சிவன்கோவில் நகராட்சி திருமண மண்டபத்திற்கு 20–12–07ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. தி. வன்னியராஜன், 28கே/10சி. அண்ணாநகர் 4ம் தெரு, தூத்துக்குடி.

ரூபாய் 203000/–(வருடத்திற்கு)

2, திருமதி எம். வேலம்மாள், 9, அண்ணாநகர் 3ம்தெரு,தூத்துக்குடி.

ரூபாய் 258055/– (வருடத்திற்கு)

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திருமதி. வேலம்மாள் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ 258055/– (வருடத்திற்கு) கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு – 1)** நகராட்சி சிவன்கோயில் தெரு நகராட்சி திருமண மண்டப்பத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியாக வருடத்திற்கு ரூ 258055/– கொடுத்துள்ள திருமதி எம். வேலம்மாள் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை முந்தைய ஏலத்தொகை ரூ 405100/–விட குறைவாக இருப்பினும் மேற்படி மண்டபம் 6 முறை ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையை விட 7வது முறையாக ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 258055/– தான் கூடுதலாக வரப்பெற்ற தொகையாகும். மேலும் மேற்படி மண்டபத்திற்கு மீள ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சத்தில் எல/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வர வாய்ப்பு இல்லை. மேலும் கடந்த 9 மாதமாக துறை மூலம் வசூல் செய்ததில் ரூ 85000/– வசூல் செய்யப்பட்டுள்ளது. நகர் முழுவதும் ஏராளமான திருமணமண்டபம் மற்றும் சமுதாயகூடம் குறைந்த வாடகைக்கு கிடைப்பதால் பொதுமக்கள் நிகழ்ச்சிகளுக்கு பிற மண்டபங்களை நாடி செல்லும் நிலையில் பொது ஏலத்தில் கலந்து கொண்டு போட்டி மனப்பாண்மையில் ஏலம் கோருவதற்கு எவரும் ஆர்வமாக இல்லாத நிலையில் 7வது முறையாக ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக வருடத்திற்கு ரூ 258055/– கொடுத்துள்ள திருமதி எம். வேலம்மாள் என்பவருக்கு உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி மண்டபம் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட மண்டபம் என்பதால் நிதியிழப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்ற தகவலும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ16/22829/2003

**<u>தீர்மானம் எண்: 29</u>**

மேற்படி திருமண மண்டபத்திற்கு 7வது முறையாக ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முந்தைய ஏலத்தொகையை விட குறைவான ஏலத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றாலும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட மண்டபம் என்பதால் நிதியிழப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்ற அலுவலகக் குறிப்பின் அடிப்படையில் வருடத்திற்கு ரூ.2,58,055/–க்கு உரிமம் கோரியுள்ள திருமதி எம்.வேலம்மாள் என்பவருக்கு மூன்றாண்டிற்கு உரிமம் வழஙக அனுமதிக்கப்பட்டது.

30. இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 52ஐ உரிமம் பெற்ற திரு சொக்கலிங்க ஓதுவார் மேற்படி கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ரூ 193602/—ஐ செலுத்தாததால் கடையை பூட்டி சீல் வைத்து உரிமம் ரத்து செய்து மறு ஏலம் விட வருவாய் ஆய்வர் பிரிவு (1) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பரிந்துரையின் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண் 52ன் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடவும் மேற்படி கடைக்குரிய வாடகை நிலவை ரூ 198320/—க்கு அவர் செலுத்தியுள்ள வைப்புத்தொகை ரூ 5000 கழித்துக்கொண்டு மீதமுள்ள நிலுவைத்தொகை ரூ 193320/—ஐ நீதி மன்றத்தில் வழக்கு தொடரவும் அது வகைக்குரிய செலவு தொகையை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ16/9676/07

**<u>தீர்மானம் எண்: 30</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

31. இந்நகராட்சி பகுதியில் அனுமதியின்றி ஆழ்துளை கிணறு அமைத்து நிலத்தடி நீரை மின்மோட்டார் மூலம் உறிஞ்சி லாரிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்ததை நகராட்சி ஆய்வுக்குழு மூலம் 6 மின் மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பின்வரும் பட்டியலில் உள்ள மேற்படி மின் மோட்டார்களை நகராட்சி இருப்பில் இருந்து நகராட்சி மூலம் பொது ஏலத்தில் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | மின் மோட்டார் விபரம் |
|---|---|---|---|
| 1 | 49 | முத்து ஜெயபால் நாடார்<br>10/9, பிரையண்ட் நகர் 5ம் தெரு | டெக்ஸ்மோ மோனோ பிளாக் (0.5 எச்.பி.) |
| 2 | 49 | முத்து ஜெயபால் நாடார்<br>10/9, பிரையண்ட் நகர் 5ம் தெரு | லூபி சென்டரிபியுகல் மோட்டார் பம்ப் (1.10/1.50 எச்.பி) |
| 3 | 49 | முத்து ஜெயபால் நாடார்<br>10/9, பிரையண்ட் நகர் 5ம் தெரு | சான்டெக்ஸ் சப்னெட்ரி பிள்— பம்ப் 32எம்எம். |
| 4 | 49 | முத்து ஜெயபால் நாடார்<br>10/9, பிரையண்ட் நகர் 5ம் தெரு | லூபி சென்டரிஉ பியுகல் மோட்டார் பம்ப் (0.75/1 எச்.பி) |
| 5 | 49 | முத்து ஜெயபால் நாடார்<br>10/9, பிரையண்ட் நகர் 5ம் தெரு | சுகுணா சென்ட்ரி பியுகல் மோட்டார் பம்ப் (0.75/1எச்பி) |
| 6 | 49 | சௌந்திரபாண்டியன் சுந்தரம்,<br>187எ. பாளையங்கோட்டை ரோடு<br>(சிதம்பரநகர்) | கிர்லோஸ்கர், Type K.OS-325H |

**அலுவலகக் குறிப்பு —** வரிசை எண் 1 முதல் 6 வரை கண்டுள்ள மோட்டார்களை பொது ஏலத்தில் விட மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனமதியை எதிர்நோக்கி ஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ3/18675/06

**<u>தீர்மானம் எண்: 31</u>**

அலுவலகக் குறிப்புபடி அங்கீகரிக்கப்பட்டது

32. இந்நகராட்சி பகுதி போல்பேட்டை கிழக்கு பழுதடைந்த பகுதி தெருக்களில் அமைந்துள்ள சிறு பாலஙகள் பழுதடைந்துள்ளது. எனவே பயனடைந்த சிறு பாலஙகள் சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ பாய் 85000/–க்கு (ரூபாய் என்பத்தைந்தாயிரம் மட்டும்)க்கு மன்றத்தில் அனுமதிக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

ம.ப.எண்.219/07–08

**<u>தீர்மானம் எண்: 32</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

33. இந்நகர் 22வது வார்டு காரப்பேட்டை பகுதியில் சீராக குடிநீர் விநியோகம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நீர் அழுத்த குழாய் பதிப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 28000/–க்கு (ரூபாய் இருபத்தெட்டாயிரம் மட்டும்) க்கு இந்நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

ம.ப.எண்.194/07–08

**<u>தீர்மானம் எண்: 33</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

34. இந்நகராட்சி பகுதி போல்பேட்டை மேற்கு தெருவில் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சாலையில் வடக்குப் பக்கம் மிகவும் பள்ளமாக உள்ளதால் அதில் மதிப்பீட்டை விட கூடுதலாக செம்மண் சரள் நிரப்பும் பணி செய்யவேண்டியுள்ளது. மேலும் அப்பணி செய்த பின்னர் மெட்டல் தார்தளம் அமைக்கும் பணி என கூடுதல் பணி செய்த காரணத்தினால் திருத்திய மதிப்பீடு ரூ. 56875/– தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** - திருத்திய மதிப்பீடு மன்றம் அஙகீகரிக்கலாம்.
மேலும் கூடுதல் செலவினம் ரூ 56875/– நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

ம.ப.எண்.66/07–08

**<u>தீர்மானம் எண்: 34</u>**

அலுவலகக் குறிப்புபடி அஙகீகரிக்கப்பட்டது

35. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சின்னமணி நகர் பூஙகாவில் சுற்று சுவர் கட்டிட மற்றும் மின்சாரம் தண்ணீர் வசதிகள் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 7,15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதி வழஙகலாம்.
2008–09ம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண்.222/07–08

**<u>தீர்மானம் எண்: 35</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

36. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் 3வது தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 525000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.
2008–09ஆம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண்.221/07–08

**<u>தீர்மானம் எண்: 36</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

37. தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இருக்குமிடம் மிகவும் பள்ளமாக உள்ளதால் மழைநீர் தேங்கி சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே அலுவலக வளாகத்தை சுற்றி உள்ள தளம் உயர்த்தி WGC சாலை முதல் முனிசிபல் நுழைவாயில் ரோடு வரை தளம் உயர்த்தி Pavement block அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 700000/– (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.
2008–09 ஆம் ஆண்டுக்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினத்தை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண். 226/07–08

**<u>தீர்மானம் எண்: 37</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

38. இந்நகராட்சி பராமிரிப்பில் உள்ள சுப்பையாமுதலியார்புரம் சார்லஸ்கோவில் அருகில் பிரையண்ட்நகர் மெயின்ரோடு பிரையண்ட் நகர் 5 மற்றும் 8வது தெரு கணேஷ நகர் மற்றும் தாமோதர நகர் ஆகிய இடங்களில் ரோட்டில் உள்ள பள்ளங்களில் சரள் விரித்து சீர் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.150000/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிலம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
2008–09 ஆம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினத்தை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண்.217/07–08

**<u>தீர்மானம் எண்: 38</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

39. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள லெவிஞ்சிபுரம் நீர்த்தேக்க நிலையம் அருகில் அமைந்துள்ள பொது விநியோக கடையின் அருகில் செப்டிக் டேங்க் அமைக்கவும் சாலை இருபுறமும் சரள் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 220000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்தி இருபதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.
2008–09 ஆம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினை மேற்க்கொள்ளலாம்.

ம.ப.எண்.225/07–08

**<u>தீர்மானம் எண்: 39</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

40. தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் லெவிஞ்சிபுரம் நீர்த்தேக்க தொட்டி அருகில் பொது விநியோகக் கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டில் தள ஓடு பதிக்கும் பணி சேர்க்கப்படவில்லை. எனவே தற்போது மேற்கண்ட இனத்தையும் சேர்த்து திருத்திய மதிப்பீடு ரூ 275000/– தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு – 1)** திருத்திய மதிப்பீடு ரூ 275000/– அனுமதிக்கலாம்.
2) கூடுதல் செலவினம் ரூ 25000/– நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

ம.ப.எண்.76/07–08

**<u>தீர்மானம் எண்: 40</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

41. தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இருக்குமிடம் மிகவும் பள்ளமாக உள்ளதால் மழைநீர் தேங்கி சுகாதாரக்கேடு மற்றும் அலுவலர்கள் மற்றம் பொது மக்கள் மழைக்காலங்களில் அலுவலகத்திற்குள் வர இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் Pavement block அமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
2008–09 ஆம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண். 227/07– 08

**<u>தீர்மானம் எண்: 41</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

42. இந்நகராட்சி பகுதி பூபாலராயர்புரம் மேற்கு சந்து பகுதி சாலையில் உள்ள பள்ளங்களை சிகப்பு சரள் கொண்டு நீரப்புவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு

ரூ.14500/– க்கு (ரூபாய் பதிநான்காயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண்.216/07–08

**<u>தீர்மானம் எண்: 42</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

43. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மாதாகோவில் அருகில் புதியதாக கிணறு அமைக்க மற்றும் கிணற்றை சுற்றி சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 45000/– (ரூபாய் நாற்பத்தைந்து ஆயிரம்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண்.215/2007–08

**<u>தீர்மானம் எண்: 43</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

44. இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள லெவிஞ்சிபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றம் சிறுபாலம் அமைக்கும் பணி பொதுநிதியிலிருந்து செய்ய 19–12–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ. 4.71% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ 6.68 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 379 தேதி 22–6–07ல் ரூ. 2,60,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.71% அதிகமாதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண்.46/07–08

**<u>தீர்மானம் எண்: 44</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

45 இந்நகராட்சி பகுதி பிரையண்ட் நகர் 13வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 9–1–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில்

கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ. 7.08 %அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 4.98% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 65,000/–க்கு அனுமதியளிக்கலாம்.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 4.98% அதிகமானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 209/07–08

**<u>தீர்மானம் எண்: 45</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

46 இந்நகராட்சி பகுதி வி.இ. சாலையில் தார் பேட்ச் சாலை வேலை பொது நிதியில் செய்ய 9–1–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 07% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 2.28 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 80,000/–க்கு அனுமதிக்கலாம்.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 07% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 211/07–08

**<u>தீர்மானம் எண்: 46</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

47. இந்நகராட்சி பகுதி ஸ்டேட்பேங்க் காலனி பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி 4–1–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 25 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு வி. தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு ரூ 0.02% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 644 தேதி 31–10–07ல் ரூ. 1,70,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 25% குறைவானதுமான திருகே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 156/07–08

**<u>தீர்மானம் எண்: 47</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

**48.** இந்நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆடுவதை செய்யுமிடத்தில் பூஙகா அமைக்கவும் சாலை அமைக்கும் பணி பொது நிதியிலிருந்து செய்ய **9–1–08** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 03%அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ 0.44 % குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1,10,000/–க்கு அனுமதிக்கலாம்

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 44% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 207/07–08

**<u>தீர்மானம் எண்: 48</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

**49.** இந்நகராட்சி பகுதி பாளையஙகோட்டை ரோட்டில் உள்ள காய்கனி மார்கெட் அருகில் தார்தளம் புதுப்பித்தல் பணி பொதுநிதியிலிருந்து செய்ய **9–1–08** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 07 % குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 1.16 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.185000/– அனுமதிக்கலாம்.

2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 07% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 208/07–08

**தீர்மானம் எண்: 49**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

50. இந்நகராட்சி பகுதி மில்லர்புரம் மெயின் சாலையில் தார்தளம் அமைக்கும் பணி பொதுநிதியிலிருந்து செய்ய 4–1–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 10 % குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு வி. தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு ரூ 0.02% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 706 தேதி 26–11–07ல் ரூ. 112000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 10% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 138/07–08

**தீர்மானம் எண்: 50**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

51. இந்நகராட்சி பகுதி பாத்திமாநகர் 6வது தெருவில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 115000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.
2008–09ஆம் ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காண செலவினை மேற்கொள்ளலாம்.

ம.ப.எண்.218/07–08

**<u>தீர்மானம் எண்: 51</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

52. இந்நகராட்சி வார்டு எண் 37, வி.இ.ரோடு கதவு எண் 207, ஹோட்டல் சுகம் நிறுவனத்திற்கு நகராட்சி மூலம் பம்பிங மெயின் குழாயில் இருந்து குடிநீர் இணைப்பு வழஙகப்பட்ட போரிங பிட் பகுதியில் மேற்படி இணைப்பில் நீர்வரத்து கட்டுப்பாட்டு இதழ் (Flow control valve) 15 LPM பொருத்தும் பொழுது போட்டோ மற்றும் வீடியோ, எடுத்த வகைக்கு ரூ.4550/– மற்றும் நீர்வரத்து கட்டுப்பாடு இதழ் உதிரி பாகஙகள் வகைக்கு ரூ.774/– ஆக மொத்தம் ரூ.5324/–க்கு செலவு தொகை வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/19617/06

**<u>தீர்மானம் எண்: 52</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

53. இந்நகராட்சிக்குட்பட்ட அரசு நிலஙகளில் ஆக்கிரமிப்பு செய்து 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்போருக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டு மனை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக சகாயபுரம், வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண் 1139/3ஏ 169, 1139/99 மற்றும் 1135/1–இல் குடியிருப்போருக்கு இலவச பட்டா வழஙகுவது தொடர்பாக இந்நகர்மன்ற 674ம் எண் நாள் 31–10–2007இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வட்டாட்சியர் அவர்களுக்கு ஆட்சேபணையில்லா விபரம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தூத்துக்குடி கோட்டாட்சியர் அவர்களின் 25–1–2008ஆம் தேதிய நகஎண் அ1. 6543/07 எண் கடிதத்தில் மேற்படி தீர்மானத்தில் ஆட்சேபணையில்லையென தெரிவிக்கப்பட்ட வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண்கள் 1139/3ஏ 169 மற்றும் 1139/99 ஆகியவைகளில் தவறுதலாக குறிப்பிட்ட சர்வே எண்களை திருத்தம் செய்து திருத்திய நகர்மன்ற தீர்மானம் இயற்ற கேட்டுக்கொண்டுள்ளார். மேற்படி திருத்திய நகரளவு எண்களான 1139/3ஏ 69 மற்றும் 1139/3ஏ 99 ஆகியவற்றை சரியாக குறிப்பிட்டு திருத்திய தீர்மானம் நிறைவேற்றலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 9357/2007

**<u>தீர்மானம் எண்: 53</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது